செய்தி வெளியீடு எண்.739 நாள்.20.10.2009

## சாகசச் சுற்றுலா

தமிழக அரசு, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கெனத் தனியாக ஓர் பிரிவினைத் தொடங்கியுள்ளது. இந்தப் பிரிவின் பல்வேறு பணிகளில் ஒன்று சாகசச் சுற்றுலாவை (Adventure Tourism) மேம்படுத்துவதாகும். மலைப்பகுதிகளுக்கு இளைஞர்களை அழைத்துச் சென்று இயற்கை வளங்களையும், அவற்றின் இனிமையினையும் நுகர வாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம், நகர வாழ்க்கையை மட்டுமே அனுபவித்து வந்த இளைஞர்கள், கடுமையான காட்டுப் பாதைகளில் பயணித்து உடலை முறுக்கேற்றிக் கொள்ளவும், உள்ளத்தைத் தெளிவாக்கிக் கொள்ளவும் வாய்ப்புகள் கிடைக்கும். எனவே, இப்பிரிவு தமிழகத்தில் இருக்கிற பல்வேறு மலைச்சாரல்களுக்கு நடைப்பயணம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்க முன்வந்துள்ளது.

அதன் முதல்கட்டமாக அக்டோபர் 30, 31, நவம்பர் 1 ஆகிய நாட்களில் சேர்வராயன் மலைக்கு இளைஞர்களை நடைபயணமாக அழைத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயணத்திற்கான பேருந்து 30.10.2009 இரவு 9 மணி அளவில் சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா அலுவலகத்திலிருந்து புறப்படும். அப்பேருந்து 31.10.2009 காலை ஏற்காட்டைச் சென்றடையும். அங்கிருந்து நடைபயணம் தொடங்கும். இரவு அங்குள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக விடுதியில் தங்குவார்கள். மறுநாள் படகில் செல்லுதல், அருகிலிருக்கும் கிராமங்களுக்குச் செல்லுதல், கிள்ளியூர் அருவிக்குச் செல்லுதல், தோட்டக்கலைப் பூங்கா, சேர்வராயன் கோயில் போன்றவற்றைப் பார்வையிட்டு, மதியம் 3 மணி அளவில் புறப்பட்டு சென்னைக்குத் திரும்புவார்கள்.

இப்பயணத்தில் கலந்துகொள்ள தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர், தங்கள் பெயரை "பொது மேலாளர், சுற்றுச்சூழல் சுற்றுலாப் பிரிவு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வாலாஜா சாலை, சென்னை-600 002" என்ற முகவரிக்குத் தொடர்பு கொண்டு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்தப் பயணத்தில் பங்குபெறும் இளைஞர்கள் நடைபயணத்திற்கேற்ற கால்சட்டை, பனியன், டிரக்கிங் காலணிகள், தொப்பி, குளிர் கண்ணாடி போன்ற பொருள்களை எடுத்து வரவேண்டும். பைனாகுலரோடு வந்தால் அருமையான காட்சிகளைப் பார்க்க வசதியாக இருக்கும். இப்பயணத்தில் பங்குபெறுபவர்கள் 6 முதல் 7 மணி

நேரம் நடக்கிற தெம்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்பயணத்திற்கு வரும் இளைஞர்கள் பசுமையான மலைச்சாரலின் அழகினை ரசித்து, மாசற்ற, குளுமையான காற்றினை நுகர்ந்து, உள்ளப் பொலிவோடு சென்னை திரும்ப இருக்கிறார்கள். இவர்களின் பயணத்திற்கு உறுதுணையாக சுற்றுலா அதிகாரிகளும், உள்ளூர் வழிகாட்டிகளும்,போகிற வழியில் இருக்கின்ற தாவரங்கள், பறவைகள், விலங்குகளை இனங்கண்டு சொல்கின்ற நிபுணர்களும் உடன் செல்ல இருக்கிறார்கள். காட்டுப் பயணத்தின்போது புகைபிடித்தல், குப்பைகளைப் போடுதல் போன்ற செயல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

இப்பயணத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.2000/-. சேர்வராயன் மலை நடைபயணத்தில் பங்குபெற விரும்புவோர் வருகிற 26.10.2009க்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் (தொலைபேசி எண். **25367850–55** / நிகரி எண். **25382772**)

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9